விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 167 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 21 புதன்கிழமை (04.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சம்பியனானது பெங்களூரு

18 வருட தவம் நிறைவேறியது



16ஆம் பக்கம் பார்க்க

## கர்ப்பிணியான தனது மனைவியின் தலையுடன் கணவன் பொலிஸில் சரண்

### குடும்பத் தகராறு கொலையில் முடிந்தது வவுனியா புளியங்குளத்தில் கொடூரம்



(வவுனியா)

கர்ப்பிணியான தனது மனைவியை படுகொலை செய்த கணவனொருவர் தனது மனைவியின் கழுத்தை அறுத்துக் கையில் எடுத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

புளியங்குளம் நொச்சிக்குளம் ஆனந்தர் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நயினாதீவு அரசினர் தமிழ்க்

04ஆம் பக்கம் பார்க்க

# நீதித்துறையில் அரசு தலையிடாது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

எமது ஆட்சியில் நீதித்துறை சுயாதீனமாக இயங்குகிறது. எந்த வகையிலும் நீதித்துறையில் அரசாங்கம் தலையிடாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## "ஆனையிறவு உப்பு" பெயர் மாற்றப்பட்டது

### சபையில் அமைச்சர் ஹந்துநெத்தி

(கொழும்பு)

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு 'ஆனையிறவு உப்பு' என்ற நாமத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

04ஆம் பக்கம் பார்க்க

### விசேட சுற்றிவளைப்பு

## சுன்னாகத்தில் 20 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ்

04ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் இரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி அடையாளம்

### ஒரு முழு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மயான மனித புதைகுழியில் இருந்து, ஒரு முழு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி நேற்றுச் செவ்வாய்க்கிழமை முழுமையாக மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒரு மனித எலும்புக்

04ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

## யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும் வீட்டுத் திட்டத்துக்கு அரசால் வழங்கப்படும் நிதியை அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

05ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மின்சார சபை தலைவராக உதயங்க நியமனம்



(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் தலைவராக மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவியிலிருந்து திலக் சியம்பலாபிட்டிய பதவி விலகியதைத் தொடர்ந்து,

04ஆம் பக்கம் பார்க்க

## கரவெட்டியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

கரவெட்டியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி சண்டிக்குளம் தெற்கு பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்

04ஆம் பக்கம் பார்க்க

### பொதுமக்களின் பாதுகாப்புக்காக

## முப்படைகளை அழைக்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

நாடு முழுவதும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக முப்படைகளை அழைக்க ஜனாதிபதி சிறப்பு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 40வது அத்தியாயத்தின் பிரிவு 12ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என்று சபாநாயகர் டாக்டர் ஜகத்


04ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலஞ்சம், ஊழலை ஒழிக்கும் அரசின் திட்டம் பாராட்டுக்குரியது

## ஜனாதிபதியிடம் அவுஸ்திரேலிய பிரதிப் பிரதமர்



(கொழும்பு)

இலஞ்சம், ஊழலை ஒழிக்கும் அரசின் திட்டம் பாராட்டுக்குரியது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் அவுஸ்திரேலியப் பிரதிப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் அவுஸ்திரேலிய பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை பொருளாதார ரீதியில் நிலையான பயணத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ஊழல் மற்றும் மோசடியை ஒழிக்க தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ரிச்சர்ட் மார்ல்ஸை தெளிவுபடுத்தினார்.

கடந்த காலத்தில் சமுத்திரப் பாதுகாப்பு, சட்டவிரோத வர்த்தகம், ஆள் கடத்தல், பயங்கரவாதம் மற்றும் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் செயற்பாடுகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய உதவிகளை இதன்போது ஜனாதிபதி பாராட்டினார்.

சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கைகளுக்கு இலங்கை மிகவும் பாதுகாப்பான நாடு என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இங்கு சுட்டிக் காட்டினார்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு இடையிலான 70 வருட பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்புகளை நினைவுகூர்ந்த பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்படுவதே தமது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் பாராட்டுவதாகவும் வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், சுற்றுலா மற்றும்முதலீட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவது, இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் ரிச்சர்ட் மார்லஸ் இங்கு தெரிவித்தார். (ம-7)

# பிரதமரை மாற்றும் நோக்கம் அரசுக்கு இல்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

மக்களின் அமோக ஆணையால் உருவாக்கப்பட்ட இந்த அரசுக்குள் குழப்பத்தை ஏற்பட்டுத்துவதற்காக எதிராளிகளால் திட்டமிட்டு போலிச் செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால் அந்தச் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. அதேவேளை, பிரதமர் ஹரிணியை மாற்றும் எண்ணமும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படவிருப்பதாகவும் அமைச்சரவையில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பிலோ -அமைச்சர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பிலோ இதுவரை எந்தவொரு கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவில்லை.

அரசுக்கு எதிரானவர்களால் திட்டமிட்டு இந்தச் செய்தி பரப்பப்பட்டுள்ளது.

அவதானத்தைத் திசை திருப்புவதற்காகவும், அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்திலும் இவ்வாறான செய்திகள் திட்டமிட்டு வெளியிடப்படுகின்றன. எந்தவகையிலும் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது. பிரதமர் ஹரிணியை மாற்றும் எண்ணமும் இல்லை என்றார். (ம-7)

# மண்டைதீவு திடுதிடுக்கை வைரவருக்கு கும்பாபிசேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு திடுதிடுக்கை ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிசேகம் நாளை மறுதினம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.52 மணிமுதல் காலை 7.22 மணி வரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது.

நாளை 5 ஆம் திகதி அடியவர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவர். (ந)

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 - 02 - 1960

அமரர் மயில்வாகனம் ஜெகநாதன்

உதிர்வு 23 - 05 - 2018



மலர்வு 25 - 12 - 1987

அமரர் ஜெகநாதன் சஞ்சீவன்

திதி: 04.06.2025

மின்னலென ஒரு செய்தி - அன்று
இதயத்தில் இடியெனவே விழுந்ததே!
மின்சாரம் என வந்த காலன்
இமைப்பொழுதில் அழகிய
குடும்பத்தின் வாழ்வுதனை
குற்றுயிராய் ஆக்கிவிட்டான்!
ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறாத காயமாய் உம் நினைவுகள்
மனதோடு இருக்கின்றதே!
இன்றுவரை நீர் எம்மோடு
இருப்பதாய் உள் மனது உணர்கின்றதே!
நீங்கள் இங்கு இல்லை என்பதை - கூட
எம் மனம் ஏற்க மறுக்கின்றதே!

தந்தையுடன் என்றுமே
பிரியாது அருகிருப்பாய்!
பல தொழில்களில் தேர்வு பெற்ற தந்தையுடன்
கல்வியிலே மேன்மை பெற்று பட்டதாரியாய்
வானகம் போன் சிற்றி எனும் இலத்திரனியல் துறைதனில்
தனக்கென இடம் கொண்டீர்
தந்தையுடன் நீ இருந்து எமை காப்பாய் என நினைத்தோம்!
தந்தை தனியே என எண்ணியோ - நீ சென்றாய்
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
காலங்கள் சென்றாலும்
காலனவன் செய்த வினை
எம் மனங்களில் ஆறாதே!
உம் உருவம் என்றும் இதயத்தில் நின்றும் அழியாதே!

(1193)

வானகம் போன் சிற்றி
64/121, ஸ்ரானலி வீதி, யாழ்ப்பாணம்.
[ சம்பத் வங்கி முன்பாக ]

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
077 533 7406

வானகம் போன் சிற்றி
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
[ BOC அருகாமையில் ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது மன்னிப்பு வழங்குங்கள்!

# கிருசாந்தி கொலையாளிகள் மனு

# நிராகரித்தது நீதிமன்றம்

(கொழும்பு)

**கிருசாந்தி குமாரசுவாமி பாலியல்வன்முறை படுகொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்ட ஐவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு நேற்று ஏகமனதாக நிராகரித்துள்ளதுடன் மேல்முறையீடு செய்வதற்கும் அனுமதிமறுத்துள்ளது.**

முதல் குற்றவாளி சோமரட்ண ராஜபக்ச உட்பட தண்டனை வழங்கப்பட்டுள்ள ஐவர் தாங்கள் பல வருடங்களாக மரணதண்டனை கைதிகளாக உள்ளனர் என தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

தங்களின் மரணதண்டனையை நிறைவேற்றாமல், தங்களிற்கு பொதுமன்னிப்பை வழங்கவேண்டும் அல்லது தங்களிற்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆயுள்தண்டனையாக மாற்றவேண்டும் என அவர்கள் தங்கள் மனுவில் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டிசில்வா அவர்களின் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டு நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது கொடூரமானது, மனிதாபிமானமற்றது என தங்கள் மனுவில் தெரிவித்திருந்த அவர்கள் இது தங்கள் அடிப்படை உரிமைகளை மீறுகின்றது என குறிப்பிட்டிருந்தனர்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கடும் ஆட்சேபணைகளை முன்வைத்தார்.

பொதுமன்னிப்பு வழங்குவது என்பது முற்றுமுழுதாக ஜனாதிபதியின் விருப்பமே எந்தவொரு குற்றவாளியும் அதனை சட்டபூர்வ உரிமையாக கருதமுடியாது என அவர் தெரிவித்தார்.

இந்த மனுகாலக்கெடுவிற்கு உட்பட்டது மேலும் மனுதாரர்கள் நல்லெண்ணத்தை உருவாக்கும் விதத்தில் செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நீதிபதிகள் குழுவினர் இந்த ஆட்சேபனையை ஏற்றுக் கொண்டதுடன் மனுவை நிராகரிக்க தீர்மானித்தனர். (நி)

## 'நல்லைக்குமரன்' மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சைவ சமய விவகார குழுவின் 2025 ஆம் ஆண்டுக்கான நல்லைக் குமரன் 33 ஆவது மலருக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்கள் 5- 7 பக்கங்களுக்குள் அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆக்கங்கள் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்ப வேண்டும்.

மின்னஞ்சல் முகவரி nallaikumaran2025@gmail.com

ஆக்கங்களை மின்னஞ்சல் மூலம்/ இறுவட்டுக்கள் மூலம் அனுப்புவது அவசியமாகும். மென்பிரதியாக அனுப்பப்படாத ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தங்களது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படல் அவசியம் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் ச.கிருஸ்நேந்திரன் அறிவித்துள்ளார். (நி-8)

## நடைபவனி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பொலித்தீன் பாவனையை முற்றாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபவனி ஒன்று யாழ்ப் பாணத்தில் நடைபெறவுள்ளது என சேவ் ஏ லைஃப் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சுதர்சிகா தெரிவித்தார்.

நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ் பொது நூலக பின் நுழைவாயில் அருகே ஆரம்பிக்கப்பட்டு யாழ் நகர் ஊடாக பிரவேசித்து நூலகத்தின் பிரதான நுழைவாயில் வரை நடைபவனி நிறைவு பெறவுள்ளது. (நி-3-8-33)

## யோகக்கலை கற்கைநெறி புதிய பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக் கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்பட விருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-8)

## யாழ். பண்ணை கடற்கரையில் சுத்தப்படுத்தும் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு பிளாஸ்டிக் மூலம் ஏற்படும் மாசை இல்லாது ஒழிப்போம் எனும் 2025 ஆம் ஆண்டிற்கான சுற்றாடல் தொனிப் பொருளுக்கு அமைவாக சுற்றாடல் வாரமானது மே 30 ஆம் திகதி முதல் யூன் மாதம் 5 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகிறது. இதனடிப்படையில்யாழ் பண்ணை கடற்கரை சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ்.மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நேற்றுக் காலை 6:45 மணி முதல் காலை 8:30 மணி வரை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ் மாவட்ட உதவி பணிப்பாளர் தவகிருபா தலைமையில் இடம்பெற்றது.

இதன் பொழுது பண்ணை கடற்கரை வளாகத்தில் காணப்பட்ட கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு தூய்மைபடுத்தல் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.


நிகழ்வின் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் , அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ் மாவட்ட பிரதி பணிப்பாளர் சூரியராஜா, யாழ் மாவட்ட விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி டி.எல். இகலகமகே , மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் , யாழ் பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர், கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாநகர சபை ஊழியர்கள் , சுற்று சூழல் தன்னார் வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-8)

## பொன்னாலை கடலுக்குள் பாய்ந்த 'ஹையேஸ்'

(அராலி)

பொன்னாலை பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் ஹையேஸ் ரக வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், நேற்று அதிகாலை காரைநகரில் இருந்து மிருசுவில் நோக்கி பயணித்த குறித்த வாகனம் வேகக்கட்டுப்பட்டை இழந்து பாலத்தில் இருந்து கடலுக்குள் பாய்ந்தது. இந் நிலையில் வாகனம் பாரிய அளவில் சேதத்துக்கு உள்ளாகியது.



வாகனத்தில் சாரதி மாத்திரம் இருந்த போதிலும் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (நி-8-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணியான...

கலவன் பாடசாலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியையாக கடமையாற்றும் ரஜூட் சுவர்ணலதா (32) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஆசிரியையின் கணவரே கொலையைச் செய்துள்ளார்.

நேற்றுக் காலை புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்குத் தனது மனைவியின் தலையை எடுத்துக் கொண்டு வந்த கணவன், மனைவியைக் கொலைசெய்து, நயினாமடு காட்டுக்குள் வீசியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கணவன்- மனைவிக்கிடையில் நீண்ட காலமாக குடும்பத் தகராறு நிலவி வந்துள்ளது. மானிப்பாயைச் சொந்த இடமாகக் கொண்ட கணவன், ஆசிரியையுடன் காதல் திருமணம் செய்துள்ளார்.

இருவருக்குமிடையில் தகராறு ஏற்பட்ட நிலையில் நேற்று இந்த விவகாரத்தை பொலிஸ் நிலையத்தில் தீர்த்துக்கொள்ளலாம் எனக் கூறி, மனைவியை அழைத்துச்சென்றுள்ளார்.

நயினாமடு காட்டுப்பகுதியில் மனைவியின் கழுத்தை அறுத்து கொலை செய்த பின்னர், கழுத்தை வெட்டி, பிளாஸ்டிக் பையில் வைத்து, மோட்டார் சைக்கிள் டிக்கிக்குள் வைத்து புளியங்குளம் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

தனது மனைவியைக் கொன்று நயினாமடு காட்டில் வீசியுள்ளதாக அவர் தெரிவித்ததையடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

# 'ஆனையிறவு...

பாராளுமன்றத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற அமர்வின்போது பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா 27/2 இன் கீழ் கடந்த அமர்வின்போது முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பின் நாமம் ( பெயர்) ரஜ உப்பு என்று குறிப்பிடப்படுகிறது. முழுச் சந்தைக் கட்டமைப்பையும் கைப்பற்றுவதற்காகவே இந்தப் பெயர் நாமம் பயன்படுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்குப் பிரதிநிதிகளின் வலியுறுத்தலுக்கு அமைய ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை "ஆனையிறவு உப்பு" என்று குறிப்பிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு தரப்பினர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஒரு தரப்பினரைத் தவறாக வழிநடத்தியுள்ளார்கள். உப்பளத்தில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து தொழிலாளர்களுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆனையிறவு உப்பு தொழிற்சாலைக்கு அரசியல் பரிந்துரைகளுடன் நியமனங்கள் வழங்கப்படவில்லை. முறையான வழிமுறைகளுக்கு அமைவாகவே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே அரசியல் தலையீடு உள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனையிறவு உப்பளத் தொழிற்சாலையின் ஒரு சில சேவையாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தால் உப்பு உற்பத்திக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தொழிலாளர்களின் நலன்புரித் திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7)

# இலங்கை...

உதயங்க ஹேமபால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)

# செம்மணியில்...

கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி - சித்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அதனையடுத்து அகழ்வுப் பணிகள் கடந்த மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமானது. இரண்டாம் நாளான 16ஆம் திகதி அகழ்வின்போது முழுமையான என்புத்தொகுதிக்கு மேலதிகமாக மண்டையோடு ஒன்றும், கை எலும்பு ஒன்றும் அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின்போது ஐந்து மண்டையோடுகளுடன், எலும்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதன் அடிப்படையில் அவை, அவசர அவசரமாக புதைக்கப்பட்டவையாக இருக்கலாம் எனும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இது வரையிலான அகழ்வுப் பணிகளில் 07 மனித மண்டையோடுகளுடன் கூடிய எலும்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

அந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதியில் ஒரு எலும்புக்கூட்டுத் தொகுதி முழுமையாக மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் நாட்களில் அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# சுன்...

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், போதைப் பொருட்களை உடைமையில் வைத்திருந்தவர்கள் என 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,)

# குடும்...

வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மரண விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

# மாணவர்களுக்கு அடையாள அட்டை

(கொழும்பு)

2026ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு தனித்துவமான அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் பிறப்புச் சான்றிதழ், பரீட்சை முடிவுகள், திறன்கள் அடங்கிய தனிப்பட்ட தரவுக் கோப்பு, தனித்துவமான அடையாள அட்டையுடன் இணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# முப்படைகளை...

விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ம-7)










































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட உதவிப்பணம் அதிகரிப்பு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

**வடக்கு கிழக்கில் நிரந்தர வீடமைப்பு திட்ட பயனாளி நிர்மாணிக்கும் அடிப்படையில் அரசினால் வழங்கப்படும் உதவிப் பணத்தை அதிகரிப்பதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆண்டுகளாக நிலவிய மோதல் சூழ்நிலை காரணமாக குறித்த பிரதேசங்களில் வாழ்ந்த குடும்பங்களுக்குரிய பெருமளவான வீடுகள் சேதமடைந்தன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 274,728 குடும்பங்களைச் சேர்ந்த 914,722 நபர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டின் இறுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 மாவட்டங்களில் 150,488 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு இலங்கை அரசு, இந்திய அரசு, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் உள்ளிட்ட பிற அமைப்புகள் மூலம் நிதி வழங்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் மேலும் 16,759 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் ஆரம்பத்தில் 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,100,000 % மற்றும் 340 சதுர அடி வீடுகளை அமைப்பதற்கு ரூபா 650,000% எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கட்டட நிர்மாண மூலப் பொருட்களின் தற்போதைய விலைகளுக்கு அமைய 550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,600,000/- மற்றும் 340 சதுர அடி வீடுகளை அமைப்பதற்கு ரூபா 950,000% எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2025ஆம் ஆண்டிலிருந்து அமுலாகும் வகையில் நிரந்தர வீடமைப்பு திட்ட பயனாளி நிர்மாணிக்கும் அடிப்படையில் அரசினால் வழங்கப்படும் உதவிப் பணத்தை பின்வரும் வகையில் அதிகரிப்பதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (நி)


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின்
இரசாயனவியல் பாட ஆசிரியர்
திருமதி.கயல்விழி சுஜீவன்
அவர்களின் அன்பு மாமியார்



அமரர். மகேஸ்வரி நடராஜா

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டுத் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3108)

ஆசிரியர் ஊழியர் நலன்புரிக்கழகம்,
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 400 | 350 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 500 | 350 | 600 |
| தக்காளி | 700 | 750 | 650 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 200 |
| கோவா | 400 | 500 | 550 | 350 | 500 |
| கரட் | 800 | 900 | 900 | 750 | 1000 |
| பூசணி | 150 | 180 | 160 | 150 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 350 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 1000 | 1000 | 650 | 1000 |
| வெண்டைக்காய் | 200 | 150 | 200 | 100-250 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 200 | 300 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 200 | 300 |
| லீக்ஸ் | 350 | 420 | 450 | 280 | 500 |
| பீற்றூட் | 600 | 500 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 800 | 400 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1500 | 1500 | 1200 | 1000 | 1500 |
| போஞ்சி | 400 | 550 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 100-160 | 200 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 250 | 200 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 250 | 250 | 100-220 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 700 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

# இராசிபலன்

**04.06.2025**
**வைகாசி 21, புதன்கிழமை**
**நவமி பின்னிரவு 3.10 மணிவரை**

**உத்தரம் முழுவதும்**
**சுபநேரம் 4.22-5.52 மணிவரை**
**இராகுகாலம் 11.52-1.22மணிவரை**

**சந்திராஷ்டமம்-அவிட்டம்**

**வளவன்**


மேஷம்

மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


ரிஷபம்

பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.


மிதுனம்

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கடகம்

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகமுண்டு, பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொலைபேசித் தகவல்கள் நன்மை தரும்.


கன்னி

பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


தனுசு

குடும்ப ஒற்றுமை கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், செய்தொழில் மேன்மையுண்டு.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.


கும்பம்

குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


மீனம்

உறவினர் வழியில் மனநிறைவான செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**நிம்மதியைத் தேடி அலைவதில் பயனில்லை அது உங்கள் நெஞ்சுக்குள்ளே இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைக்கு நீதி வேண்டும்

# இறுதி ஊர்வலத்தில் கவனயீர்ப்பு!

(தருமபுரம்)

**கொலைக்கு நீதி வேண்டும். இறுதி ஊர்வலத்தின் போது பிரதேச மக்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிராய் குளத்திற்கு அண்மையில் கடந்த 31 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பூநகரி செம்மன் குன்று பகுதியைச் சேர்ந்த கந்தசாமி பிரணவன் அவர்களின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. இந் நிலையில் கொலைக்கு நீதி வேண்டி இறுதி ஊர்வலத்தின் போது கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க



வனியுறுத்தி பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் பொது மக்களின் கையொப்பம் அடங்கிய மகஜரையும் கையளித்தனர். வாள் வெட்டுக்குழுக்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள், உயிரை பறித்தவரை ஒரு போதும் மன்னிக்காதே! போதையை கூண்டோடு ஒழிப்போம்! போன்ற பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேர் பூநகரி பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

## பெறுமதிசேர் வரி தொடர்பில் கிளிநொச்சியில் செயலமர்வு

(கண்டாவளை)

கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய வரி ஏற்பாடுகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கான பெறுமதி சேர் வரி(VAT) கணக்குகளினை நிகழ்நிலை முறை மூலம் சமர்ப்பித்தல் தொடர்பான செயலமர்வு நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் ந.திருலிங்கநாதன் தலைமையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களை வைத்திருக்கின்ற கூட்டுறவு சங்கங்களிற்கு பெறுமதிசேர் வரி(VAT) தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்றது.

வளவாளராக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி. சி.தெய்வசீலன் கலந்து கொண்டிருந்தார்.

இந் நிகழ்வில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை வைத்திருக்கின்ற கூட்டுறவு சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் மற்றும் கணக்காளர்கள், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் A.D.C.C Basnayaka, உதவி ஆணையாளர் எம். சிந்துஜா, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத் தின் உதவி ஆணையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (8-315-316)

## சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய 4 உணவகங்கள் மீது வழக்குத் தாக்கல்

(மன்னார்)

மன்னார் நகரபகுதியில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்த நான்கு உணவகங்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக கையுறை, தலையுறை பயன்படுத்தாமை, சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை கைவசம் வைத்திருந்தமை, உரிய அனுமதி பெறாமை, பழுதடைந்த உணவு பெருட்களை களஞ்சியப்படுத்தியிருந்தமை, சமையலறை சுத்தமாக பேணப்படாமை, கழிவுநீர் தொடர்பில் கவனம் செலுத்தாமை போன்ற குற்றச்சாட்டின் பெயரில் குறித்த உணவகங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் பள்ளிமுனை வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மன்னார் சுற்று வட்ட பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு 71000 ரூபாய் அபராதமும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய உணவகங்களுக்கு எதிரான வழக்குகள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன. (8-285)

## கஞ்சா மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதநகர் பகுதியில் 6 கிலோ கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

பாழடைந்த வீடொன்றில் இருந்து குறித்த கஞ்சா பொதி கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த கஞ்சா பொதியினை பொலிஸார் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (8-316)

## வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்



(வவுனியா)

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதிக்கு காப்பற் இடும் பணியை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 24 மில்லியன் ரூபா செலவில் 1.75 கிலோமீற்றர் காப்பற் வீதியும் மீதமாக உள்ள 4.35 கிலோ மீற்றர் வீதிக்கு கிரவலும் போடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

## முல்லை உணவகங்களில் திடீர் பரிசோதனை

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட முத்தையன்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள பலசரக்கு கடைகள் மற்றும் தேநீர் கடைகளில் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நடவடிக்கையின் போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற வகையில் இருந்த் உணவுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.

அத்தோடு கடை உரிமையாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டதோடு, உணவு நிலையங்கள் மற்றும் பலசரக்கு கடைகள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகளும் பொதுச்சுகாதார பரிசோதகர்களால் எடுத்து கூறப்பட்டிருந்தது.

முத்தையன்கட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் லோஜிதன் தலைமையிலான குழுவினரால் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)



வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பரிசோதனைகளுக்கு அதிக கட்டணம்

# அறவிடும் மருந்தகங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை- நுகர்வோர் அதிகாரசபை

(கொழும்பு) ........................................

**டெங்கு மற்றும் ஏனைய நோய் தொடர்பான பரிசோதனைகளுக்காகத் தற்போது அறவிடப்படும் கட்டணத்தைவிட அதிகத் தொகையினை அறவிடும் மருந்தகங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.**

தற்போது இந்த பரிசோதனைகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை விட அதிக கட்டணம் கோரப்படுவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இரத்த பரிசோதனைகளுக்காக 400 ரூபாயும் டெங்கு நோய் குறித்த பரிசோதனைகளுக்காக 1,200 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மல்வானைப் பகுதியில் இயங்கும் மருந்தகம் ஒன்றில் இரத்த பரிசோதனைக்காக அதிகளவான கட்டணம் வசூலிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்தகத்துக்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்






அதிபர்
திருமதி.கவின்ஜா நவஜீவா

ஆசிரியர்
திரு. சிவானந்தன் நவகாந்தன்

02.06.2025 திங்கட்கிழமை அன்று இசுறுபாய பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III (SLTES III) இற்கு நியமனம் பெற்ற எமது பாடசாலையின் அதிபர் திருமதி.கவின்ஜா நவஜீவா அவர்களையும், ஆசிரியரான திரு.சிவானந்தன் நவகாந்தன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். (C-3109)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை


## கடை உரிமையாளர் மீது யாழில் வாள் வெட்டு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடை உரிமையாளர் மீது வன் முறைக் கும்பல் ஒன்று வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலைப் பகுதியில் கடை ஒன்றினை நடத்தி வரும் நபர் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய வன்முறைக் கும்பல் அவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற் கொண்ட பின்னர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளது.

தாக்குதலில் படுகாய மடைந்தவரை, அப்பகுதியை சேர்ந்தவர்கள் மீட்டு, சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-8-33)

## வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி திருவருள் மிகு மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

பொங்கல் விழாவிற்கு முன்னதாக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மண மாலைப் படிப்பும், 9 ஆம் திகதி திங்கட் கிழமை இரவு சிலம்பு கூறல் படமும் விளக்கெரிப்பும் இடம்பெற்று மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணியளவில் வளந்து கட்டல் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறும் என ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-3-60)

## சோளம் இறக்குமதி அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

திரிபோஷ உற்பத்திக்கு தேவையான தரப்படுத்தப்பட்ட சோளத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலதிக போசாக்கு உணவாக அனைத்து கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள 6 மாதங்களுக்கு கூடிய சிசுக்கள் மற்றும் 5 வயதுக்கு குறைவான பிள்ளைகளுக்கு சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் திரிபோஷா வழங்கப்படுகிறது. திரிபோஷா உற்பத்திக்காக சோளம் மற்றும் சோயா மூலப்பொருட்களாக பாவிக்கப்படுகின்றன.

இலங்கை திரிபோஷா லிமிட்டட் நிறுவனத்தின் வருடாந்த சோளத்தின் தேவை 18,000 மெற்றிக் தொன்கள் ஆகும் என்பதுடன், மாதாந்த தேவை 1,500 மெற்றிக் தொன்கள் ஆகும்.

இந் நிலையில் திரிபோஷ உற்பத்திக்கு தேவையான தரப்படுத்தப்பட்ட சோளத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)


சேவை நலன் பாராட்டுக்கள்



திருமதி. இராஜேஸ்வரி கதிர்காமநாதன்
(பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர் SLTS-I)

சேவை விபரம்

- யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலை (01.10.1992-17.06.1997)
- யா/வரணி ஸ்தான அ.மி.த.க பாடசாலை (18.06.1997-01.01.2000)
- யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் (02.01.2000-31.01.2000)
- யா/ வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயம் (01.02.2000- 01.01.2010)
- யா/ கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை (02.01.2010-23.04.2018)
- யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் (24.04.2018-28.02.2025 வரை)

கடமையில் கண்ணியமாய்
33 வருடங்கள் சேவைதனை
செய்திட்ட ஆசானே
உங்கள் பணிதனை வாழ்த்துகிறோம்
வாழ்க உம் புகழ் வளர்க பல்லாண்டு.

Wish You All the Best (சி-3107)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வரணி.




பாராட்டி வாழ்த்துகின்றோம்

2024 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது பாடசாலை மாணவி

செல்வி
யோசப் ஐஸ்ரின் பபிசாலினி
(144 புள்ளிகள்)

அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



BEST WISHES (4450)

வாழ்த்துவோர்- பாடசாலைச் சமூகம்
யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## போலாந்து ஜனாதிபதி தேர்தலில் கரோல் நவ்ரோக்கி வெற்றி!




(போலந்து)
போலந்தின் ஜனாதிபதித் தேர்தலில் தேசியவாத எதிர்க்கட்சி வேட்பாளர் கரோல் நவ்ரோக்கி மிகக் குறுகிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக நேற்று முன்தினம் திங்களன்று அந் நாட்டு தேசிய தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட நிலையில், எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் கூடிய தீவிர பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த நவ்ரோக்கி, வார்சாவின் தாராளவாத மேயர் ரஃபால் ட்ர்சாஸ் கோவ்ஸ்கியை எதிர்த்து நடந்த இரண்டாம் சுற்றில் 50.89 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அதேநேரம், ரஃபால் ட்ர்சாஸ் கோவ்ஸ்கி 49.11 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

இதனிடையே போலந்தின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நவ்ரோக்கி, போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்கின் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு திட்டத்தைத் தடுக்க தனது ஜனாதிபதி வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தொடர வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. (நி-8)

## அதிகாலையில் துருக்கியை உலுக்கிய நிலநடுக்கம்!



(அங்காரா)
துருக்கியின் தென் மேற்குப் பகுதியில் உள்ள மர்மாரிஸ் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.8 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டது.

இந்த அனர்த்தத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயமடைந்ததாகவும் துருக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கத்தின் பீதியால் முக்லா மாகாணத்தில் வீட்டை விட்டு வெளியேறி தப்பிக்க முயன்ற 14 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், பீதியால் பாதுகாப்புக்காக ஓடிய சுமார் 70 பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கம் மத்தியதரைக் கடலில் மையம் கொண்டிருந்ததாகவும், உள்ளூர் நேரப்படி அதிகாலை 2:17 மணிக்கு ஏற்பட்டதாகவும் பேரிடர் மற்றும் அவசர நிலை மேலாண்மைத் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிரேக்க தீவான ரோட்ஸ் உட்பட அண்டை பகுதிகளில் இது உணரப்பட்டது.

துருக்கி முக்கிய பிளவுக் கோடுகளின் மத்தியில் அமைந்துள்ளது.

இதனால் அங்கு நில நடுக்கங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

2023 ஆம் ஆண்டில், 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் துருக்கியில் 53,000இற்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றது.

மேலும், இலட்சக் கணக்கான கட்டடங்களை அழித்து சேதப்படுத்தியது.

இதனால், அண்டை நாடான சிரியாவின் வடக்குப் பகுதிகளில் மேலும் 6,000 பேர் உயிரிழந்தனர். (நி-8)



## திடீரென வெடித்த எட்னா எரிமலை




(வத்திக்கான்)
இத்தாலியின் சிசிலி தீவின் கிழக்கு கடற்கரையில் உள்ள புகழ்பெற்ற மவுண்ட் எட்னா எரிமலை நேற்று முன்தினம் திங்கட்கிழமை திடீரென வெடித்தது. எரிமலை வெடித்ததால் அருகிலுள்ள பகுதிகளில் இருந்த சுற்றுலாப் பயணிகள் பீதியில் ஓடினர்.

தகவலறிந்து மீட்புப் படையினர் அப்பகுதிக்கு விரைந்தனர். சுற்றுலாப் பயணிகள் மற்றும் அருகில் உள்ள கிராம மக்களை அங்கிருந்து வெளியேற்றினர். எரிமலையிலிருந்து ஆபத்தான வாயுக்கள் வெளியேறி வருகிறது.

சில மணிநேரங்களாக எரிமலையிலிருந்து சாம்பல் வெளியேறி வருவதாகவும், இந்த நிலை தொடர்ந்தால், மேலும் வெடிப்புகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக வும் நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மவுண்ட் எட்னா கடந்த ஐந்து ஆண்டுகளாக எரிமலை தொடர்ந்து பல முறை வெடித்து வருவதாக இத்தாலியின் புவி இயற்பியல் மற்றும் எரிமலையியல் தேசிய நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-8)



இனப்...
மௌன...
கப்பலி...

(காசா)
இஸ்ரேலி...
பதற்காக பு...
காலநிலை செ...
தன்பேர்க்கும் ...



காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக தனது கப்பல் சிசிலியிலிருந்து புறப்பட்டுள்ளது என சர்வதேச இலாப நோக்கமற்ற அமைப்பான ...


## சொத்தில் ...
### ஆபிரிக்காவுக்...

கேட்ஸ் அறக்கட்டளை அடுத்த இரண்டு தசாப்தங்களில், அதாவது 2045 வரை வழங்க திட்டமிட்டுள்ள 200 பில்லியன் டொலர்களில் ஆபிரிக்கா மிகப்பெரிய பயனாளியாக இருக்கும் என்று மைக்ரோ சாப்ட் நிறுவனர் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பேடுகொலை குறித்த உலகின்
# னத்தைவிட இது ஆபத்தில்லை!

## லில் காசாவுக்கு
## புறப்பட்டார் கிரெட்டா



**லின் முற்றுகையை உடைப் புறப்பட்டுள்ள கப்பலில் செயற்பாட்டாளர் கிரெட்டா ம பயணிக்கின்றார்.**

★ ★ ★



பீரிடம் புளோட்டிலா கூட்டணி தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு முன்னர் இதே போன்ற தொரு முயற்சியில் ஈடுபட்டபோதும் அது மத்திய தரைக் கடலில் இடம்பெற்ற ஆளில்லா விமானத் தாக்குதலால் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கப்பலில் கிரெட்டாவுடன் பிரான்ஸின் பாலஸ்தீனத்தை பூர்வீகமாகக் கொண்ட அரசியல்வாதி ரிமா ஹசனும் பயணம் செய்கின்றார்.

இந்தக் கப்பல் கட்டானியா துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவு நிவாரணங்களையே கொண்டு செல்கின்றோம் ஆனால் இது குறியீட்டு அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது என பிரீடம் புளோட்டிலா கூட்டணி தெரிவித்துள்ளது.

நாங்கள் எவ்வளவு பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும் என்பதால் இதனை செய்கின்றோம், ஏனென்றால் நாம் முயற்சிப்பதை இழக்கும் தருணம் நம் மனித நேயத்தை இழக்கும் தருணம் என புறப்படுவதற்கு முன்னர் கிரெட்டா தன்பேர்க் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணி எவ்வளவு ஆபத்தானதாகயிருந்தாலும் இனப்படுகொலை செய்யப்படும் மக்கள் குறித்து முழு உலகமும் மௌனமாகயிருப்பது போல இது ஆபத்தானது இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைநடுவில் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் ஏழு நாட்களிற்குள் நாங்கள் காசாவை சென்றடைவோம் என செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

# ம பெரும் பகுதியை
## க்கு வழங்கும் பில்கேட்ஸ்



பில்கேட்ஸ் தெரிவித்தார்.

ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, தற்போது சுமார் $175 பில்லியன். சொத்து மதிப்புள்ள 69 வயதான உலகின் ஐந்தாவது செல்வந்தரான பில்கேட்ஸ், உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவதற்காக தனது மொத்த செல்வத்தில் 99 சதவீதத்தை நன்கொடையாக வழங்க விரும்புவதாக அண்மையில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் நேற்று முன்தினம் திங்களன்று இது குறித்து பேசிய அவர், சுகாதாரம் மற்றும் கல்வி மூலம் மனித ஆற்றலை வெளிக்கொணர்வதன் மூலம், ஆபிரிக்காவில் உள்ள ஒவ்வொரு நாடும் செழிப்புப் பாதையில் செல்ல வேண்டும் என்றும் சுட்டிக் காட்டினார்.


ஆபிரிக்காவின் இளம் கண்டுபிடிப்பாளர்கள் கண்டத்தில் சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த அறிவிப்பினை மொசாம்பிக்கின் முன்னாள் முதல் பெண்மணி கிராசா மச்செல் வரவேற்றுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனா

## இந்திய சுற்றுலா பயணிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான முறையானதொரு திட்டம் இதுவரையிலும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவும் விகிதம் அதிகரித்துள்ள நிலையில், அங்கிருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, டெங்கு, சிக்குன் குன்யா, இன்புளுவென்சா மற்றும் கொரோனா வைரஸ் தொற்று அபாயங்கள் குறித்து சுகாதாரத்துறை உரிய கவனம் செலுத்தி வருவதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், தற்போது பரவி வரும் வைரஸ் தொற்றுகள் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
1ல் செவ்
கி-பா- 58 1/2
உயரம்: 5'8"
தகைமைஃதொழில்-A/L ,CEB
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ : B/15571

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:அத்தம்
7ல்செவ்
கி-பா-60
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L,ITfield
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15575

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி-பா-38
உயரம்:5'8"
தகைமை/தொழில்:BBM, Business (Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15576

பிறப்பு: 1986-இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம்:5'3"
தகைமை/தொழில்: A/L.Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15577

பிறப்பு: 1986- RC
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா-76
உயரம்:5'8"
தகைமை/தொழில்:A/l,Advisor(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15579

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'6"
கி-பா-12
தகைமை/தொழில்: BCom(Following)
எதிர்பார்ப்பு-உயர்பதவி
தொ.இ: G/15596

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-கேட்டை
உயரம்: 5'3"
கி-பா-16 1/2
தகைமைஃதொழில்: Bsc,Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு, Engineer
தொ.இ: G/15598

பிறப்பு-1991 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 37
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS, Doctor.
எதிர்பார்ப்பு:Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ. இ: G/15014

பிறப்பு -1992 - இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - MBBS, Doctor
எதிர்பார்ப்பு : Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ: G/15015

பிறப்பு -1988 - இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 58 1/4
உயரம்: 5'7"
தகைமைஃதொழில் - MBBS, Doctor
எதிர்பார்ப்பு : Doctor, Engineer, Lecturer, Banker
தொ.இ: G/14678

இல: 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டுமே

## இன்று ஒரு தகவல் 387



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கோபம்

எனக்கு அடிக்கடி கோபம் வந்துவிடுகின்றது சார், அதற்கு என்ன சார் அர்த்தம்? என்றார் ஒருத்தர். உங்களுக்கு அடிக்கடி பைத்தியம் பிடிக்கின்றது என்று அர்த்தம் என்று விளக்கம் கொடுத்தார் இன்னொருத்தர். இது ஒரு சரியான விளக்கம்தான். "கோபம் என்பது ஒரு தற்காலிகப் பைத்தியம் தான்"என்கின்றார் ஒரு பெரியவர் .தற்காலிகமாக ஒருவருக்கு பிடிக்கின்ற பைத்தியம் தான் கோபம். அந்த சமயத்திலே அவர் மறைத்து வைத்திருக்கின்ற பைத்தியக்காரத் தனம் வெடித்துக்கொண்டு வெளியிலே வரும் அவ்வளவுதான்.

இது மனிதனை சுருக்கும் - சக்திகளைக் குறைக்கும் என்கிறார் அந்தப் பெரியவர். அவர் சொல்லும்படி பார்த்தால் நாம் எல்லோருமே தினமும் கொஞ்ச கொஞ்ச நேரம் பைத்தியமாகி அதன்பின் சாதாரணமாகி விடுகின்றோம் என்பது புரிகின்றது. இப்பொழுது, நாம் ஏதோ ஒரு விடயத்திற்க்காக ஒருவரிடம் கோபப்படுகின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.சிறிது நேரத்திலே சமநிலைக்குத் திரும்பி விடுகின்றோம். அப்பொழுது சில பேர் உண்மை நிலையை பின்னால் தள்ளவிட்டு மன்னிப்புக் கேட்கின்ற பழக்கம் உண்டு.

"நான் கோபப்பட்டுவிட்டேன், என்னை மன்னியுங்கள்" என்று ஒருவர் சொல்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அவர் மனதிற்குள்ளே புகுந்து அங்கே என்ன நடக்கின்றது அவர் ஏன் மன்னிப்பு கேட்கின்றார் என்று ஆராய்ந்து பார்த்தால் தெரிய வருகின்ற விடயம் என்ன தெரியுமா? அவர் அப்படி மன்னிப்பு கேட்பது வெறும் நடிப்பு என்பது தெரியவரும். அவரைப் பற்றி நாம் மட்டமாக நினைத்துவிடுவோம்,அவர் மேன்மையானவர் என்பதை நம்மிடம் காட்டிக் கொள்வதற்காகவே அவர் அப்படி செய்கின்றார்.

நாமும் அப்படித்தான்! நாம் யார் மேலேயாவது கோபப்பட்டு விட்டு சிறிது நேரம் கழித்துஅவரிடமே மன்னிப்பு கேட்க்கின்றோம் என்றால் என்ன அர்த்தம்? அந்த நபர் நம்மை ஒரு குரங்கு என நினைக்கக் கூடாது என்று நமது உள் மனது நினைக்கின்றது. அதனுடைய வெளிப்பாடுதான் மன்னிப்பு கேட்பது.

சரி கோபத்தை வெல்வதற்கு ஏதாவது வழி உண்டா? என்று கேட்டால் அதற்கும் அந்தப் பெரியவர் வழி சொல்கின்றார்

மனதைப் பற்றிய சில உண்மைகளைப் புரிந்துகொண்டால் கோபத்தை வென்று விடலாம் என்கிறார் அவர்.

உங்கள் மனம் இருக்கிறதே அது ஒருமுனைப்பட்டது.

அதாவது, ஒரே சமயத்திலே இரண்டு விடயங்களைப் பற்றி அதனாலே நினைக்க முடியாது.ஒரு எண்ணத்திலே இருந்து இன்னொரு எண்ணத்திற்கு வேகமாக மாறக்கூடிய சக்தி மனதிற்கு உண்டு.

ஆனால், ஒரு சமயத்திலே ஒரு எண்ணத்தைத்தான் மனதிலே நினைக்க முடியும். கோபம் வரும்போது நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள்.

ஐந்து தடவை உங்க மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து மெதுவாக மெல்ல வெளியிலே விடுங்கள்.அப்போது என்ன நடக்கும் என்றால் மனதிலே கோபத்திற்குப் பதிலாக சுவாசம் பற்றிய சிந்தனை மாறும். இந்த சுவாசத்திற்கு பின்பு கோபம் மறுபடியும் மனதிலே தோன்றினால் கூட அது தீவிரமாக இருக்காது.

இது மாதிரி மனதிலே கோபத்தை நோக்கிப் பாயும் சக்தியை திருப்பி விட்டுவிட்டால் கோபத்தை இன்னொருத்தர் மேலே பிரயோகிக்க வேண்டிய அவசியம் இருக்காது.

இதைத் தொடர்ந்து செய்துகொண்டு வந்தால் கோபம் யார் மேலும் வராத அளவுக்கு அது ஒரு பழக்கமாகவே ஆகிவிடும்.

இதுதான் அந்தப் பெரியவர் சொல்கின்ற வழி.

இந்த வழியை ஒரு குடும்பத்தலைவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார்.

"ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதத்திலே கோபத்தை சமாளிக்கிறார்கள் சார்,நான் எனக்கு என்று ஒரு வழி வைத்திருக்கின்றேன்" என்றார்.

"அது எப்படி"என்றேன் ஆச்சரியமாக!

"என் மனைவிக்கு திடீர் திடீர் என்று பயங்கரமாக கோபம் வந்துவிடும் சார். கோபம் வந்துவிட்டால் கையிலே கிடைக்கிற பாத்திரத்தையெல்லாம் எடுத்து என் முகத்துக்கு நேராக வீசுவது உண்டு சார்!" என்றார்.

"அதை எப்படி சமாளிக்கின்றீர்கள்?"என்று கேட்டேன்.

"அது ஒன்றும் கஷ்டமில்லை சார். ஒரு தலையணையை எடுத்து என் முகத்திற்கு நேராக பிடித்துவிடுவேன்அவ்வளவுதான்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய அபிவிருத்தியில் கற்றல் செயற்பாடுகளின் மேலான கல்வியியலாளர்களின் வகிபாகம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### கற்பித்தலுக்கும் மேலான காத்திரமான பங்களிப்பு

பிராந்திய அபிவிருத்தியில் கல்வியியலாளர்களின் வகிபாகம் அவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் தாண்டி பிராந்தியத்தின் அபிவிருத்தி பணிகளுக்கு அவர்களின் அறிவாற்றலும் புலமைத்துவமும் அனுபவமும் கைகொடுக்க வேண்டும் என்னும் கருத்து பலவருடகாலமாக முன்னுரைக்கப்பட்ட விடயமாக இருந்த போதிலும் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தமது ஆளணி மற்றும் செயற்பாட்டுக்கு அமைவாக அந்தந்த பிராந்திய அபிவிருத்தியில் தம்மாலான பங்களிப்பை செய்து வருகின்றன என்னும் கருத்துக்களும் அவர்கள் பக்கத்திலிருந்து நியாயப்படுத்தப்படுகின்றது. தென் பகுதி பிராந்தியங்களிலுள்ள பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் அந்தந்த பிராந்தியத்தின் மேன்மைக்கு பலவழிகளில் உதவியிருக்கின்றன இன்னும் அதற்கும் மேலாக அமைந்திருக்கின்றதனை பலரும் சுட்டிக்காட்டும் அதே வேளையில் வடபிராந்தியத்தின் அபிவிருத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு போதாது என்னும் சலசலப்பு நீண்டகாலமாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வழமையான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் தாண்டி பிராந்திய அபிவிருத்தியிலும் பல்கலைக்கழகங்கள் முழுமையாக ஈடுபட வேண்டும் என்னும் முனைப்பு மேலைத்தேய நாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளில் முதன்மையாக இணைந்திருக்கின்றன.

### அறிவுப்புலத்தை விருத்தி செய்யும் வழிவகைகள்

பல்கலைக்கழகத்தில் கற்கும் கற்பிக்கும் ஆளணியின் செயற்பாட்டை பிராந்திய அபிவிருத்தியை நோக்கி திசைதிருப்பி விட வேண்டும். மக்களுக்கான திட்டங்களை சரியான இலக்கு நோக்கி நகர்த்துவதற்கான சமகால துல்லியமான தகவல் திரட்டின் தேவை (Data base) அவசியமானதாக அடிப்படை அம்சமாக தேவைப்படுகின்றது. வடபிராந்திய மக்கள் பற்றிய ஆய்வு இங்கிருக்கும் வளம் பற்றிய வெளிப்படுத்தல், இருக்கின்ற வளத்தை வினைத்திறனாக பயனபடுத்தும் தொழிற்சாலைகள், உலக தரத்துக்கு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தரநிர்ணய செயலாக்க நிறுவன கட்டமைப்பு மிக மிக அவசியமானது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் பல்கலைக்கழகங்களை தரப்படுத்தும் U-Multirank எனப்படும் உலகளாவிய பல்கலைக்கழகங்களை தரப்படுத்துதலில் ஐந்து அம்சங்களை அடிப்படையாக வைத்து தரநிர்ணயஞ் செய்கின்றார்கள். இதில் முதலாவதாக கற்பித்தல் கற்றல் செயற்பாடுகள் (Teaching and Learning). இரண்டாவதாக ஆய்வுகள் (Research). மூன்றாவதாக தகவல்களை பரிமாற்றஞ் செய்தல் (Knowledge transfer) நான்காவதாக உலகளாவிய நோக்குதல் (International Orientation) இவற்றுடன் ஐந்தாவதாக பிராந்திய அபிவிருத்தி (Regional Development) என்பனவாகும். இங்கே பிராந்திய அபிவிருத்தி மிகவும் முன்னிலைப்படுத்தப்பட்டு அதில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு மதிப்பிடப்படுவதனால் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் பிராந்திய அபிவிருத்திக்கு மிகவும் முன்னுரிமை கொடுத்திருக்கின்றன.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




அதனால் பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள பிராந்தியங்கள் அபிவிருத்தியை நோக்கி முன்னகர்த்திச் செல்வதற்கும் நடைபெறும் திட்டங்களை மதிப்பீடு செய்யவும் பல்கலைக்கழகங்களிலுள்ள துறைசார் வல்லுனர்கள் முழுமையாக பங்களிப்பதுடன் அதிலுள்ள ஆய்வுகளை பிராந்திய அபிவிருத்தியை மையப்படுத்தி மேலெடுத்துச் செல்வதற்கும் உந்துதலளிக்கும்.

மக்களின் பணத்தில் கிடைக்கும் ஊதியத்தையும் ஆய்வுக்கான நிதியையும் பெற்று அந்த மக்களுக்கு பயனளிக்காத வகையில் உலக ஆய்வை செய்வதில் ஏது பலன். எமது மக்கள் இன்னலுறும் பிரச்சனைகளுக்கு குறிப்பாக விவசாயிகள் தொழிற்றுறையினர் எதிர்நோக்கும் பிரச்சனைகளை முக்கியத்தவப்படுத்தி அதற்கு தகுந்த தீர்வுகளை கொடுத்தாலேயே அவர்கள் மூலம் விவசாய உற்பத்தியையும் தொழிற்றுறை வளர்ச்சியையும் நாம் முன்னேற்றலாம். இந்தியா சீனா போன்ற நாடுகள் தமது மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளித்து விவசாய கால்நடை மீன்பிடி மற்றும் பெருந்தோட்ட சுகாதார கல்வி மற்றும் விஞ்ஞான மேம்படுத்தல்களை செய்வதனால் தற்போது தங்களின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய முன்னேற்றத்தை கண்டுள்ளன. இந்த நிலைமை எமது நாட்டிலும் ஏற்படுத்தப்படல் வேண்டும். தொழிற்றுறை வளர்ச்சிக்கு பல்கலைக்கழகங்கள் அவசியம் முன்னுரிமையளித்து அந்த பிரதேசத்து வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தவும் உள்ளூர் உற்பத்தியை தரமானதாக மதிப்பேற்றஞ் செய்து உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் எமது பிராந்தியத்திற்கு கிடைக்கும் அந்நிய செலாவணி நாட்டின் வளர்ச்சிக்கும் மிகவும் உந்துதலாகும். அந்தந்த மாகாணங்களின் மற்றும் பிராந்தியங்களின் சுவாத்திய தன்மைக்கேற்றவாறு பயிர்ச்செய்கையை செப்பனிட்டு வளர்ந்து வரும் விஞ்ஞான தொழினுட்பங்களை விரைந்து உள்வாங்குவதன் மூலம் செலவு குறைந்து தரமான விளைவுகளை நாம் பெற்றிட முடியும்.

வடபிராந்திய அபிவிருத்தியின் முழுமைக்கு அவசியம் யாழ்ப்பாண பல்கலைக்கழக புலமைசார் வல்லுனர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. திட்டங்களை செப்பனிடவும், சமகால நிலைமைக்கு ஏற்புடையதான தகவல் விஞ்ஞானத்தை (Data science) ஒழுங்கமைப்பதற்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அவற்றை கண்காணிப்பதற்கும் இன்னும் அவற்றின் விளைவுகளை மதிப்பிட்டு அந்தந்த நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கவும் பல்துறைசார் நிபுணத்துவம் மிக அவசியம். அதனை பல்கலைக்கழகங்கள் வழங்குமாயின் எமது பிரதேசத்திலும் தொழிற்றுறைகள் விரைந்து அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு.

ஆய்வுத் தகவல்களை மக்களுக்கு தெரியப்படுத்துதல், புதிய விஞ்ஞான தகவல்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ளல், பாடசாலை மாணவர்களை ஆய்வுக்கு ஊக்கமளித்தல், பாடசாலைகளில் ஆய்வு முயற்சிகளுக்கு களம மைத்தல், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூக மையங்கள், கிராமத்து சங்கங்கள் என்பனவற்றின் வளர்ச்சிக்கு பக்கபலமாக அறிவியல் சார்ந்து உதவியளித்தல். புத்தாக்கங்களுக்கு முன்னுரிமையளித்து அவற்றை எமது மக்கள் பயன்படுத்தவும் ஏற்பாடு செய்தல் அவசியம். பலநாடுகளில் புத்தாக்கங்கள் ஊக்குவிக்கப்பட்டு அவற்றின் சிறப்புரிமை மக்கள் பயன்படுத்த வழிசெய்திருக்கின்றார்கள்.

ஆக மொத்தத்தில் பல்கலைக்கழகங்களின் கல்விசார் சமூகத்தின் கடப்பாடாக அந்தந்த பிராந்திய அபிவிருத்தி அமைந்திருக்கின்றது என்பதனை நாமும் ஏற்றுக்கொண்டு எவ்வாறு புலமையாளர்களை உள்வாங்கி அபிவிருத்தி நடைபெறுகின்றதோ அங்கே விரைந்து நாம் அனைவரும் எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி நடந்தேறும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தோற்றுவாயும் இவையனைத்தையும் மையப்படுத்தியே 1991 ஆம் ஆண்டு அமைந்தது. மறைந்த பேராசான் முன்னைநாள் துணைவேந்தர் துரைராசா அவர்களின் தலைமைத்துவத்தில் ஆரம்பித்த யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் விழுதுகள் விட்டு ஆலமரமாக விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. எடுத்த கொள்கையிலும் சற்றே விலகாது தனக்குரிய அங்கத்துவர்களைக் கொண்டு அது பரந்து வளர்ந்திருப்பது அனைவரையும் பூரிக்க வைத்திருக்கின்றது. இன்னும் இதனைது தாகத்தை தணிப்பதற்கும் வருடாந்த நிகழ்வுகளில் பிரசன்னப்படும் ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் தகவல்களை பொதுமக்களும் கிரகிக்கத்தக்க வகையில் பத்திரிகையிலும் உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனத்திலும் பாதுகாக்கப்படல் வேண்டும்.

எமது அபிவிருத்தியில் நாமே பங்குதாரர்களாகி அதன் பிரதிபலனை நாமே அனுபவிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 790





துர்க்காதேவிக்கு ஒரு வீர வைஷ்ணவனைப் பலி கொடுப்பதாக நான் சபதம் செய்திருக்கிறேன் அதற்காகத்தான்! என்றான் தேவராளன்.

இந்தச் சமயத்தில் வந்தியத்தேவன் மதில் சுவரில் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த சிறிய செடி வேரோடு பெயர்ந்து வர ஆரம்பித்தது. வேலின் முனையில் சிக்காமல் எப்படி தேவராளன் கழுத்தின் மேல் குதிப்பது என்று வந்தியத்தேவன் யோசித்துக் கொண்டே "அந்த வீர வைஷ்ணவன் என் அருமைச் சிநேகிதன். அவனுக்கு ஒரு போதும் நான் துரோகம் செய்யமாட்டேன். அவனுக்குப் பதிலாக என்னையே பலி கொடுத்து விடு!" என்றான்.

"அப்படியானால் இந்த வேலுக்கு இப்போதே இரையாகி விடு!" என்று தேவராளன் வேலைத் தூக்கி வந்தியத்தேவன் மீது குறி பார்த்தான்.

வந்தியத்தேவன் செடியை விட்டு விட்டு வேலின் முனைக்கு அடியில் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு கீழே குதித்தான். குதித்த வேகத்தில் தரையில் மல்லாந்து விழுந்தான். தேவராளன் அந்த அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு வேலைத் தூக்கினான். அந்தச் சமயத்தில் பின்னாலிருந்து ஓர் உருவம் ஓடிவந்து தன் கையிலிருந்த தடியினால் தேவராளன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டது. தேவராளன் வந்தியத்தேவன் பேரில் பொத்தென்று விழுந்தான்.

நாய் தன் எஜமானைத் தாக்கியவன் பேரில் பாய்ந்தது. ஆழ்வார்க்கடியான் அதற்கும் சித்தமாயிருந்தான். தன்னுடைய மேல் துணியை விரித்து நாயின் தலை மீது போட்டான். நாய் சில வினாடி நேரத்துக்குக் கண் தெரியாத குருடாயிருந்தது. அச்சமயம் சுருக்குப் போட்டுத் தயாராக வைத்திருந்த காட்டுக் கொடியை அதன் கழுத்தில் எறிந்து வைஷ்ணவன் நாயை ஒரு மரத்தோடு சேர்த்துப் பலமாகக் கட்டினான். இதற்குள் வந்தியத்தேவன் தேவராளனைத் தன் மேலிருந்து தூக்கித் தள்ளிவிட்டு எழுந்தான். தேவராளன் வைஷ்ணவனுடைய ஒரே அடியில் நினைவு இழந்து மூர்ச்சையாகிக் கிடந்தான். இருவரும் இன்னும் சில காட்டுக் கொடிகளைப் பிடுங்கி அவனுடைய கால்களையும் கைகளையும் கட்டிப் போட்டார்கள். பிறகு வந்தியத்தேவன் வேலையும், ஆழ்வார்க்கடியான் கைத் தடியையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

சம்புவரையர் மாளிகையின் வாசற் பக்கத்தைத் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் நெடுந் தூரத்துக்குக் காடு மண்டிக் கிடந்தது. அதற்குள்ளே புகுந்து விட்டால் வெளியில் வருவது கஷ்டம். ஆகையால் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் மதில் சுவர் ஓரமாகவே விரைந்து சென்றார்கள்.


விரைந்து நடக்கும் போதே ஆழ்வார்க்கடியான் "நீ புத்திசாலி என்று நினைத்தேன். நான் நினைத்தது தவறு என்று இப்போதே தெரிந்தது" என்றான். "அவசரப்பட்டுச் சுரங்க வழியில் புகுந்ததைச் சொல்கிறீரா? அதன் மூலமாக எவ்வளவு பயங்கரமான மர்மங்களைக் கண்டுபிடித்திருக்கிறேன் தெரியுமா?" என்றான் வந்தியத்தேவன். "அது ஒரு புறம் இருக்கட்டும் 'வைஷ்ணவனைக் கண்டுபிடிப்பதற்கு ஒத்தாசை செய்கிறாயா?' என்று தேவராளன் கேட்டதும் 'ஆகட்டும்'.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வளையல்



முன்னொரு காலத்தில் கமலாபுரம் என்னும் ஊரில் ஒரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் வெளியூர் சென்று கைவினைப் பொருட்களை வாங்கி வந்து ஊர்ஊராய் விற்று வாழ்க்கையை நடத்தி வந்தான். அவனுக்கு ஒரு மனைவி. அவள் வீட்டு வேலைகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டு, தினமும் இவன் வாங்கி வரும் கைவினைப் பொருட்களை தரம் வாரியாக பிரித்து கொடுத்து அவனுக்கு உதவி செய்வாள். அதன் பின் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பண்டம் என்று விலை வைப்பார்கள். (பண்டம் என்பது அந்தக் காலத்தில் பணத்திற்கு பதிலாக பொருளை மாற்றி கொள்வது).

வணிகன் அ[illegible] வெளியூர் சந்தைக்கு சென்று நிறைய கைவினைப் பொருட்களை வாங்கி வந்தான். அகல் விளக்கு, வண்ணவண்ணை கை வளையல்கள், ஆபரணங்கள், போன்றவைகள் நிறைய வாங்கி வந்தான்.

அவன் மனைவி அவைகளை ஒவ்வொன்றாய் பிரித்து வைத்தாள் அப் பொழுது ஓர் ஜோடி வளையல்களின் அழகு அவள் மனதை பறித்தது. வணிகனிடம் இதை நான் வைத்து கொள்கிறேன் என்றாள். வணிகன் அதை வேறொருவர் கேட்டிருக்கிறார். அதனால் உனக்கு அடுத்த முறை வாங்கி வந்து தருகிறேன் என்றான்,

இவளுக்கு மனது கேட்கவில்லை. அதன் அழகு அப்படி அவள் மனதை ஈர்த்து விட்[illegible] அயர்ந்து தூங்கி கொண்டிருக்கும் பொழுது, இவள் மெதுவாக எழுந்து அந்த ஜோடி வளையல்களையும் மறைத்து வைத்து விட்டாள்.

மறுநாள் காலை வழக்கம்போல் வணிகன் எழுந்து தயாரானான். அவன் மனைவி எல்லாப் பொருட்களையும் ஒரு பெரிய துணிப் பையில் போட்டு அவனிடம் கொடுத்தாள். அவன் அதை சுமந்து கொண்டு வியாபாரம் செய்ய கிளம்பினான்.

பண்டமாற்று முறை என்பதால் தனியாக ஒரு பையையும் எடுத்துச் செல்வான்.

ஒரு வளையல் ஜோடி கொடுத்தால், இரண்டு ஆழாக்கு தானியமோ இல்லை. இரண்டு பெரிய கருப்பட்டி துண்டுகளோ கிடைக்கும். இன்னும் கொஞ்சம் அதிக மதிப்புள்ள பொருள் என்றால் அதற்கு நகைகள் கூட கிடைக்கும். இப்படி நிறைய பொருட்களை சேகரித்து அதை சந்தைக்குச் சென்று கொடுத்து இந்த கை வினை பொருட்களை வாங்கி வருவான்.

வணிகனின் மனைவி அவன் போன பின் அவசர அவசரமாக அவள் ஒளித்து வைத்திருந்த வளையலை எடுக்க சென்றாள்.

ஆனால் அந்த வளையல்கள் வைத்த இடத்தில் காணவில்லை. சுற்று முற்றும் தேடிப் பார்த்தாள் எங்கும் கிடைக்கவில்லை. எங்கு போயிருக்கும்? என்னவாயிருக்கும் என்று அதிர்ச்சியாய் நின்றாள். இங்கு இப்படி இருக்க அந்த ஜோடி வளையல்களின் கதை என்னவென்றால் குச்சியூர் என்னும் ஊரில் இரு திருடர்கள், வசித்து வந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அரசியலை நாம் தவிர்ப்போமானால் நம்மால் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் நம்மை ஆள நேரிடும்.
> – ப்ளாட்டோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவைக்கு பிராயச்சித்த அபிசேகம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் பயன் யாது? என்று கேட்டால், அதற்கான விடை மௌனமாக இருக்கும்.

ஆக, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது நாங்கள் ஒற்றுமைப்பட்டுள்ளோம் – ஓரணியாக நிற் கின்றோம் என்பதைக் காட்டுவதற்கான ஏற் பாடு மட்டுமே.

மற்றும்படி மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் ஆகப்போவது எதுவுமில்லை.

தவிர, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏதேனும் தரப்பு மீறினால், அதற்கான தண்டனை ஏதும் உண்டா? என்றால் அதுவும் இல்லை என்பது வெளிப்படை.

ஆக, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததன் பின்னர், எந்தத் தரப்பும் தனித்து ஆட்சிமையக்க முடியாத சூழ்நிலையில் தாம் ஒன்றுபட்டுள்ளதாகக் காட்ட வேண்டிய கட்டாயம் இருப்பதனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளன.

எனினும் இந்த ஒற்றுமையானது இன்னொரு தேர்தலைக் கடந்து நின்று நிலைக்குமா என்றால் இல்லை என்பதே அதற்கான பதில்.

பரவாயில்லை. தமிழ்க் கட்சிகள் இதய சுத்தியோடு ஒற்றுமைப்படுமாக இருந்தால், அதுகண்டு தமிழ் மக்கள் நிச்சயம் ஆறுதல் அடைவர் என்பதோடு இதனை முடிவுறுத்தலாம்.

இங்கு நாம் கூறவந்த விடயம் தமிழ் மக்கள் பேரவை பற்றியதாகும்.

ஆம், 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவைக்கு 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலே மாரகமாக அமைந்தது.

அதாவது, 2018இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது பேரவையில் இடம்பெற்ற கட்சிகள் அணிசேர்வதில் ஏற்பட்ட இழுபறியே பேரவைக்குள் குழப்பத்தை ஏற் படுத்தியது.

ஆனால் 10 ஆண்டுகள் நீடித்த அந்தத் தோசத்தை நீக்குவதாக 2025இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைகிறது.

ஆம், அன்று பேரவையில் இருந்து யாரை விலக்க வேண்டும் என்று கூறப்பட்டதோ அவர்களோடு தான் நேற்று முன்தினம் (02.06.2025) புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

நல்லது. மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தமானது பத்து ஆண்டுகள் கடந்து தமிழ் மக்கள் பேரவைக்கு நடந்த பிராயச்சித்த அபிசேகம் எனக் கருதிக் கொள்ளலாம்.

# மன்னார் சதொச மனிதப் புதைகுழியை மூடுவதற்கு இடைக்காலத் தடைவிதிப்பு

## வவுனியா மேல் நீதிமன்றம் அதிரடி

(மன்னார்)

மன்னார் "சதொச" மனிதப்புதைகுழியை மூடுவதற்கு வவுனியா மாவட்ட மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது.

மன்னார் "சதொச" மனிதப்புதைகுழி மூடப்படுவதை எதிர்த்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களால் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு மீதான விசாரணைகளை அடுத்தே வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படக்கூடும் என்பதாலும் மனித எச்சங்கள், சான்றுப்பொருட்கள் பல எடுக்கப்பட்டிருப்பதனால் அங்கு அகழ்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையில்லை என்பதாலும் அகழப்பட்ட மன்னார் "சதொச" மனிதப்புதைகுழியை மூடுமாறு கடந்த மாதம் 8 ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இருப்பினும் அதனை எதிர்த்து சட்டத்தரணி ரட்ணவேல் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு வவுனியா மாவட்ட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில்,

இம் மனிதப் புதைகுழியை மூடுவது தொடர்பில் அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் அனுமதி பெறப்படவில்லை எனவும் அம் மனிதப்புதைகுழியில் இருந்து மேலும் மனித எச்சங்கள் அல்லது சான்றாதாரங்கள் கண்டறியப்படாது என்ற உத்தரவாதம் இல்லை எனவும் சுட்டிக்காட்டி அதனை மூடுவதற்கு இடமளிக்கக் கூடாது என வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் கோரப்பட்டது.

வாதங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி மன்னார் "சதொச" மனிதப்புதைகுழியை மூடுவதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து பூரண அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (ம-7)

# பாடசாலைகளூடாக இளவயதிலேயே நீச்சல் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்

## பாராளுமன்றில் ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

பாடசாலைகள்தோறும் நீச்சல் தடாகங்கள் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு இள வயதிலேயே நீச்சல் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எம்.பி கோரிக்கை விடுத்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தவருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நீரில் மூழ்கி 17பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதியும் முல்லைத்தீவு - குமுழமுனைப் பகுதியில் கோவில் தீர்த்தக் கேணியில் மூழ்கி ரஜிதரன் கிருசிகா, சற்சொரூபநாதன் ரஸ்மிளா ஆகிய இரு பாடசாலை மாணவிகள் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர தாமரைக் குளத்தில் பூப்பறிக்கச் சென்ற இராஜசேகர் நிலாந்தன், சிவநேசன் பிரணவன் ஆகியோருமாக ஒரேநாளில் நான்கு பேர் இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இவர்களில் மூவர் பாடசாலை மாணவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறாக ஒரே நாளில் நான்குபேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளமையில் முல்லைத்தீவு மாவட்டமே சோகமயமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள மாணவர்கள் மூவருக்கும் நீச்சல் தெரியாது. இப்படியாகப் பல மாணவர்கள் நீச்சல் தெரியாத நிலையில் காணப்படுகின்றனர். எனவே பாடசாலைகளில் நீச்சல் தடாகங்களை அமைத்து மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்கினால் நல்லதென எண்ணுகின்றேன். தயவுசெய்து இந்த விடயத்தை கவனத்திலெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

வலம்புரி நாளிதழும் மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை தனது ஆசிரியர் தலையங்கம் ஊடாக வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,299)

## மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் 3 ஆம் கட்டத்தை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் 3 ஆம் கட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

யாழ்ப்பாணம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுக அபிவிருத்தியின் I ஆம் II ஆம் கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

குறித்த துறைமுக அபிவிருத்தியின் III ஆம் கட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மயிலிட்டி மீன்பிடித்துறைமுக அபிவிருத்தியின் III ஆம் கட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள தரையில் கட்டுமானங்களை மேற்கொள்வதற்கும் கருத்திட்டக் காலப் பகுதியை 2027 வரை நீடிப்பதற்கும் கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (ம-7)

## யாழ்.பல்கலை முன்றலில் குருந்தூர் மலையில் அரங்கேறும் அடாவடிகளை எதிர்த்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

குருந்தூர் மலைப் பகுதியில் இடம்பெறும் தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்பட வேண்டும், தம் நிலத்தை பண்படுத்துகையில் கைதான தமிழ் விவசாயிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்னிறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இன்று நண்பகல் 12 மணியளவில் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

(ம-7,33)

## கெஹெலியவுக்கும் பிணை அவரது புத்திரனுக்கும் பிணை

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல்ல ஆகியோரைப் பிணையில் விடுவிக்கக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்-2025

## எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்!



கிரகநிலை - இராசியில் கேது - களத்திர ஸ்தானத்தில் சனி, ராகு - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன் - இலாப ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் இலாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்று இலட்சியத்துடன் இருக்கும் சிம்ம இராசியினரே! நீங்கள் எதிலும் முதலாவதாக இருப்பீர்கள். இந்த மாதம் வேகத்தை விட்டு விவேகமாக செயற்படுவது வெற்றியை தரும். பணவரத்து எதிர்பார்த்ததை போல இருக்கும். மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும்போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். எதிர்பார்த்த அளவு வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். கூட்டுத் தொழில், வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பது நல்லது. சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன், மனைவியிடையே மனஸ்தாபங்கள் அகலும். எனவே கவனமாக எதையும் பேசுவது நல்லது. பிள்ளைகளிடம் அன்புடன் பேசுவது நன்மை தரும். அக்கம் பக்கத்தினருடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு விவேகமாக செயல்படுவது வெற்றியை தரும். எதிர்பார்த்ததற்கு மாறாக காரியங்கள் நடக்கலாம் கவனம் தேவை. வீண் அலைச்சல் ஏற்படும்.

கலைத்துறையினருக்கு எதிர் பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்




கும். அரசியல்துறையினருக்கு நினைக்கும் காரியங்கள் தள்ளிபோகலாம். வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும். மேலிடத்திடம் நெருக்கம் அதிகரிக்கும். மனம் மகிழும் காரியங்கள் நடக்கும்.

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறுவதை கவனமாக கேட்டு அதன்படி நடப்பது வெற்றிக்கு உதவும். வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது.

**மகம்:** இந்த மாதம் வீண் மனக் கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். பணவரவு இருக்கும்.

வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் ஏற்படும்.

**பூரம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை. பழைய பாக்கிகள் சிறிது தாமதத்திற்கு பின் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.

**உத்திரம்:** இந்த மாதம் குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமையில் சிவன்கோயிலுக்கு சென்று சிவனையும் நவகிரகத்தில் சூரியனையும் தீபம் ஏற்றி வழிபடுவது எல்லா நன்மைகளையும் உண்டாக்கும்

**அதிஷ்ட கிழமைகள்:** சூரியன், சுக்கிரன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 19, 20

**அதிர்ஷ்ட தினங்கள்:** 2, 3, 4, 30

## எதையும் துணிச்சலுடன் செய்து முடிப்பீர்கள்!



கிரகநிலை - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி, ராகு - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன் - தொழில் ஸ்தானத்தில் குரு - லாப ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் இலாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** சாதுர்யமாக பேசி சகல காரியங்களையும் சாதிக்கும் திறமை உள்ள கன்னி இராசியினரே! நீங்கள் உழைப்பினால் உயர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இந்த மாதம் உங்களுக்கு எதிர்ப்புகள் அகலும். பகை விலகி எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தகராறுகள் வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் துணிச்சலுடன் செய்து முடிப்பீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எண்ணப்படி எல்லாம் நடக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உங்களது செயல்களுக்கு தடை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகி விடுவார்கள். பணவரத்து கூடும். தொழிலை விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். திருமண முயற்சி கைகூடும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பெண்களுக்கு சாதக பாதகங்களை பற்றி கவலைப்படாமல் எந்த காரியத்தையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும்.

கலைத்துறையினருக்கு பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். பயணங்கள் செல்ல நேரலாம். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும். அரசியல்துறை




யினருக்கு எதிர்பார்த்த காரியங்கள் தடைகளின்றி முடியும். எதிர்ப்புகள் மறையும் பகைபாராட்டியவர்கள்பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள்.

நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். மனஉறுதி அதிகரிக்கும். மாணவர்களுக்கு போட்டிகள் குறையும். எதிலும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் மதிப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் அனுகூலம் உண்டாகும். எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது. பணம் சார்ந்த கஷ்டங்கள் குறையும். காரிய வெற்றியும், நன்மையும் உண்டாகும்.

**அஸ்தம்:** இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். இராசிநாதன் புதன் சஞ்சாரத்தால் புத்தி தெளிவு உண்டாகும். எந்த பிரச்சினையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும்.

**சித்திரை 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்க பெறலாம். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும், சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்கப் பெறும். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** புதன்கிழமையில் ஆஞ்சநேயரை வெண்ணை சாற்றி வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். மனோதைரியம் கூடும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 21, 22

**அதிஷ்ட தினங்கள்:** 5, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவார்ப்பணம்

# அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து

2025 இல்

10 ஆம் ஆண்டு நினைவுதனில்

20 ஆம் ஆண்டு நினைவுதனில்





அன்னை மடியில்
25.02.1950

ஆண்டவன் அடியில்
26.05.2015

அமரர் திரு.

## நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

திதி : வைகாசித் திங்கள் பூர்வபக்க நவமி
04.06.2025

அன்னை மடியில்
23.02.1951

ஆண்டவன் அடியில்
02.01.2006

அமரர் திருமதி

## ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி : மார்கழித் திங்கள் பூர்வபக்க திருதியை
22.12.2025

(ஜெகதா ஹாட்வெயர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும் கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்)

வத்திர துண்டன் பொற் தாளதிலே!
சென்னி தாழ்த்தி உமையீந்தீர்!
வந்தித்து நிற்போர் வாழ்த்தி நிற்க
வாழ்வு தனில் உயர்ந்து நின்றீர்!

வாகுசனாய் உம் வாசல் தனில்
வந்தோர்க் கெல்லாம் வாழ்வு தந்தீர
வாதான்னியம் உம் குணமென்று
வாழ்ந்துதான் உணர்த்தி நின்றீர

விச்சுருதி தாம் பாட
தேவாதி தேவர் தாம் வந்து நிற்க
விஷமாட்சன் சரணம் என்று
விண்ணேகிச் சென்றுவிட்டீர்.

வீட்டு நெறி கிடைத்ததுவோ
வீரேஷ்வர் பாதமதில்
வீடாரம் வெறித்ததுவே உம்
நேச வீட்சிதம் இல்லாமல்

வெண் சாமரம் வீசி நிற்க
வெந்து சனம் ஆயிரத்தார்!
வெறுமை கொண்டு நின்றுவிட
விண்ணுலகு ஏகிவிட்டீர்.

வேய்ங் குழலில் கானமென
இணையாய் இருந்த மாது
வியனுலகு சென்றுவிட
தொடர்ந்து நீரும் சென்றீரோ!

வைரவக் கடவுளவர் வாஞ்சையாய்
வந்து அழைத்தாரோ!
வைரமே எமை வருத்தி
வானுலகில் வாழ்வு கொண்டீர்!

வாஞ்சை மிகுந்துவிட
வருந்தி நின்று அழைக்கின்றோம்
வந்தெம்மை வாழ்த்திவிட்டு
வாரியணைத்து மகிழ்ந்திடுமையா!

வாயில் தனில் விழிதன்னை
மீட்டிடாமல் பதித்தாலும்
வர மாட்டீர் என உணர்ந்து
விழிநீர் பெருகுதையா!

எந்தையே! அன்னையே!
எங்கினி உமை கண்டடைவோம்
எத்தனை தவம் இயற்றி நின்றால்!
உம்மை இங்கு பெற்றிடுவோம்?

ஐயனே! கொடிவழி பெருகும்போது
தங்கள் நல் அறங்களும் தொடரும் என
அக்கினிப் பிளம்பென கொதித்து வழியும்
விழிநீரை சாட்சியாக்கி வாக்களிக்கின்றோம்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ஈரவிழிகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(1195)




18 ஆவது ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் கிங்ஸ்சை வீழ்த்தி பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் சம்பியனானது.

18 வருடங்களாக வெற்றிக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற பெங்களூர் அணி மற்றும் பெங்களூர் ரசிகர்களின் கனவு நேற்று இரவு நனவானது.

18-வது ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் ராயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி ஆர்சிபி அணியின் தொடக்க வீரர்களாக விராட் கோலி-சால்ட் களமிறங்கினர். விராட் கோலி நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சால்ட் அதிரடியாக விளையாடி 9 பந்தில் 16 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த மயங்க் அகர்வால் 24, பட்டிதார் 26 என ஆட்டமிழந்தனர். நிதானமாக விளையாடி வந்த விராட், அதிரடியாக விளையாட ஆரம்பித்தார். ஆனால் அதற்குள் விக்கெட்டை பறிகொடுத்தார். அவர் 35 பந்தில் 43 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து லிவிங்ஸ்டன் - ஜித்தேஷ் சர்மா ஜோடி சேர்ந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினர். 2 சிக்சர்கள் விளாசிய லிவிங்ஸ்டன் 25 ரன்னிலும் 2 பவுண்டரி 2 சிக்சர் விளாசிய ஜித்தேஷ் 10 பந்தில் 24 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஆர்சிபி அணி 20 ஓவரில் 190 ரன்கள் எடுத்தது. பஞ்சாப் அணி தரப்பில் ஜேமிசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவினால் நிர்ணயிக்கப்பட்ட 191 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. (ம-7)

# கரவெட்டி அரசடி பகுதியில் மரக்காலையில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பிரதேசத்தின் கரவெட்டி சாமியன் அரசடிப் பகுதியில் அமைந்துள்ள மரக்காலை ஒன்றில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து உடனடியாக அங்கு சென்ற கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் ஹம்சனாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் அப் பகுதி பொதுமக்களுடன் இணைந்து உடனடியாக செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மின்னொழுக்கின் காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டதாகவும் கதவுகள், நிலைகள் உள்ளிட்ட சில மரம் சார்ந்த பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் உடனடியாக செயற்பட்டமையால் பல இலட்ச ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள், மரப்பலகைகள் போன்றவற்றுக்கு தீப் பரவல் ஏற்படாமல் பாதுகாக்க முடிந்துள்ளது. (ம-7,33)

# நீதித்துறை...

அரசாங்க.தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை (03) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சர்கள் கடந்த ஆட்சி காலங்களில் அந்தந்த விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் நாம் எமது ஆட்சியில் இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வசதி, வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலேயே கடந்த காலங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக தற்போது சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதில் அரசாங்கத்தின் அபிலாஷைகளும் முக்கியத்துவமுடையவையாகும். ஊழல், மோசடியாளர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஸ்திரமாகவுள்ளது.

ஆனால் கடந்த அரசாங்கங்கள் இவ்வாறான வழக்குகளுடன் தொடர்புடையவர்களை அந்தந்த நிறுவனங்களுக்கே பொறுப்பாக நியமித்தன. அரசியல் தலைமைத்துவம் இவ்வாறானவர்களைப் பாதுகாக்கின்றது என்பதே அவற்றின் மூலம் நீதித்துறைக்கு வழங்கப்பட்ட செய்தியாகும். நாம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியிருக்கின்றோம்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் நீதித்துறை அமைச்சராக இருந்திருந்தாலும் மஹிந்தானந்தவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பினை எண்ணி மகிழ்ச்சியடைந்திருப்பேன். எமது ஆட்சியில் நீதித்துறை சுயாதீனமாக இயங்குவது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இதனை அரசாங்கம் நீதித்துறையில் தலையீடு செய்வதாகக் கருத முடியாது. இந்த தீர்ப்பு அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி மக்களுக்கும் மகிழ்ச்சியளிக்கிறது என்றார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3112) 076 825 7716 (ஆகாஸ்)


2ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 20.09.1952
விண்ணில் 29.05.2023

அமரர் ஆழ்வான் சந்திரநாதன் (சந்திரன்)

(ஓய்வு பெற்ற கிராமிய வங்கி முகாமையாளர்,
அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் )

திதி:நவமி 04.06.2025

ஆண்டுகள் இரண்டு ஆனதே அப்பா ஆனாலும்.....
பாசமது விலகாத – பாரினிலே
உங்களைப் போன்ற – இளவயதிலும்.
கடமை தவறாத கண்ணியம் குலையாது
இள வயதினில் எமக்காக உமையே
அர்ப்பணித்து கோடுபோட்டு வாழ்ந்த வாழ்வினையே – எமையும்...
கோடு தவறாமல் வாழ வழி காட்டிய தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

(1191)

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனன்மார், சகோதரர்கள்


NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
SLIIT உயர்கல்வி நிறுவனத்தின்
BSc (Hons) in IT
&
BBA (Hons)
இளமாணி பட்டப்படிப்புகளுக்கான
அனுமதிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன - 2025
JUNE INTAKE 2025 | 4 YEARS
CLOSING DATE - 23 JUNE
வடக்கில் தரமான கல்வியுடன் உறுதியான வேலை வாய்ப்பு எமது SLIIT NORTHERN UNI இல் மட்டுமே!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807
northernuni.lk apply@northernuni.com
Visit our Website
(C-3110)



வீடு வாடகைக்கு தேவை
கச்சேரி, அரியாலை,
திருநெல்வேலி மற்றும் யாழ்.
நகரை அண்மித்த பகுதிகளில்
வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு :
077 291 9079
(4460)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3113)



பணியாளர் தேவை
எமது நிறுவனமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவையாக உள்ளது.
- Waiter - (Room Boy) (3 மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.)
- காவலாளி
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர் (பெண் பணியாளர்களும் விரும்பத்தக்கது)
- Bill Clark (3 மொழிகளும் தெரிந்தவர் - பெண் பணியாளர்களும் விரும்பத்தக்கது)
(C-3111)
இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 601 6310, 077 243 1310


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org